**DEPOSITION OF WITNESS**
Judicial Form No. 53
(See Rule 42)
(Chapter XXIII Code of Criminal Procedure)

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, No.I, UDUMALPET**

| | | |
|---|---|---|
| Calender | : | CC No. 187/2017 |
| Miscellaneous | : | |
| Preliminary Register | : | |
| Sessions | : | |
| Deposition of Witness for | : | Prosecution P.W.1 |

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : சந்தியா | தொழில் | : |
| தகப்பனார் பெயர் / கணவர் பெயர் | : மகேஷ் | ஜாதி | : |
| கிராமம் | : | இனம் | : |
| தாலூக்கா | : | வயது | : |
| Mail ID | : | Mobile No. | : |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969, (Central Act 44 of 1969) on 12.06.2023.

**எதிரி தரப்பில் குவிமுச பிரிவு 311 ன் படி மனு தாக்கல் செய்து அனுமதிக்கப்பட்டு சாட்சி மீண்டும் வரவழைக்கப்பட்டு குறுக்கு விசாரணை**

1. எந்த தேதியில் எனக்கு மின் இணைப்பு பெயர் மாற்றம் செய்யப்பட்டது தெரிய வந்தது என்றால் 2012ல் தெரிய வந்தது. யார் சொன்னார்கள் என்றால் எதிரி சொன்னார். மின் இணைப்பு பெயர் மாற்ற விண்ணப்பத்தில் எதிரி கையெழுத்து போட்டாரா என்றால் நான் போடவில்லை யார் போட்டார்கள் என்று தெரியவில்லை. எதிரி போட்டாரா என்று எனக்கு தெரியவில்லை. மின் இணைப்பு எந்த மின்வாரிய எல்லைக்குட்பட்டது என்றால் முக்கூட ஜல்லிப்பட்டி எல்லைக்கு உட்பட்டது மின் இணைப்பு எண் 245 ஆகும். இந்த மின் இணைப்பு பெயர் மாற்றத்தில் என் கையெழுத்து இல்லாதது சம்பந்தமாக நான் உடுமலை காவல் நிலையத்தில் எப்போது புகார் கொடுத்தேன் என்றால்

நான் திருப்பூர் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அலுவலகத்தில் புகார் கொடுத்தேன். மேற்படி புகாரை நான் தான் கைப்பட எழுதினேனா என்றால் ஞாபகம் இல்லை. அதில் என்ன விவரம் உள்ளது என்று தெரியுமா என்றால் தெரியும். எனது பெயரில் அங்கு எவ்வளவு நிலம் உள்ளது என்றால் மொத்தமாக எனது பெயரில் 13.00 ஏக்கர் நிலம் உள்ளது. மேற்படி நிலத்தை நேரடியாக கோபாலகிருஷ்ணனுக்கு கிரையம் செய்தோமா என்றால் இல்லை பொது அதிகார பத்திரம் அர்ஜுன் அமராவதி சிட்ஸ் நிறுவனத்தின் மேலாளர் ஸ்ரீதருக்கு கொடுத்தோம். எனது கணவர் மகேஷ் மேற்படி ஸ்ரீதர் இடம் பெற்ற கடனுக்கு ஆதரவாகத்தான் மேற்படி ஆவணம் ஏற்படுத்தப்பட்டது என்றால் சீட்டு பணம் ரூ.6,00,000/—கட்ட வேண்டியது இருந்ததால் அதற்காக வற்புறுத்தி மேற்படி பொது அதிகார பத்திரம் பெற்றார்கள். மேற்படி பொது அதிகார ஆவணம் 2004ம் ஆண்டு எழுதி கொடுத்தோம். தினேஷ் என்பவரிடம் இருந்து தான் எதிரி கோபாலகிருஷ்ணன் மேற்படி இடத்தை கிரையம் பெற்றார் என்றால் சரிதான். மின் இணைப்பு எந்த ஆண்டு என் பெயருக்கு பெற்றேன் என்றால் 1998ம் ஆண்டு பெற்றேன். மேற்படி காலகட்டத்தில் ஏற்படுத்தப்பட்ட அனைத்து அசல் ஆவணங்களும் தினேஷ் இடம் நான் கொடுத்தேன் என்றால் இல்லை பொது அதிகார பத்திரம் மட்டும் தான் கொடுத்தேன். இன்றைய தேதியில் 1998ம் ஆண்டு பெயர் மாற்றுதவற்காக கொடுக்கப்பட்ட அசல் ஆவணங்களை அனைத்தும் எதிரியிடம் தான் உள்ளது என்றால் சரியல்ல நாங்கள் தான் பயன்படுத்தி வந்தோம் 2012ல் எனக்கு தெரிய வந்தது. மேற்படி ஆவணம் எதிரியின் பெயருக்கு மாறி உள்ளது என்பது. எனக்கு சொந்தமான 13 ஏக்கர் நிலம் எதிரியின் பெயருக்கு மாரியது எனக்கு எப்போது தெரிய வந்தது என்றால் ஞாபகம் இல்லை. 13 ஏக்கர் தோப்பில் தென்னை மரத்தை தவிர வேறு என்ன இருந்தது என்றால் கொய்யா, சப்போட்டா, மாம்பழம், தேக்கு, மோட்டார், கிணறு, சிறிய அளவில் 3 வீடுகள் இருந்தது. இதை தரவி வேறு வழக்கு ஏதேனும் உள்ளதா என்றால் நில அபகரிப்பு புகாரும் என் கணவர் மூலம் கொடுத்துள்ளேன். வேறு வழக்கு எதுவும் இல்லை. அ.வ.எண்.448/18 மேற்படி சொத்து சம்பந்தமாக வழக்கு நிலுவையில் உள்ளது என்றால் ஞாபகம் இல்லை. வழக்கு சொத்தில் உள்ள வீடு சம்பந்தமாக புகார் கொடுத்துள்ளேனா என்றால் இல்லை. இந்த வழக்கு நிலுவையில் உள்ளபோது எதிரியிடம் சென்று பணம் கேட்டு நானும் என் கணவரும் அனுகியுள்ளோம் என்றால் சரியல்ல. எனக்கு பாத்தியப்பட்ட இடத்தில் இருந்து எப்போது வெளியேறினேன் என்றால் எனது மாமனார் மாமியார் தான் தோட்டத்தில் இருந்தார்கள் அவர்களை ஊருக்கு வெளியே கொண்டு வந்து விட்டுவிட்டார்கள் ஊர்காரர்கள் போன் செய்து நாங்கள் போய் அவரை கூட்டி வந்தோம். இந்த வழக்கு புகார் என் கணவரின்

வற்புறுத்தில் பேரில் கொடுத்தேன் என்றால் சரியல்ல. இந்த வழக்கிற்கும் எதிரிக்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றால் சரியல்ல.

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியால் படித்து பார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கையெழுத்து செய்தும் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது.

Sd/-Vijayakumar,
நீதித்துறை நடுவர் எண்.1
உடுமலைப்பேட்டை.

<u>DEPOSITION OF WITNESS</u>

<u>Judicial Form No. 53</u>

<u>(See Rule 42)</u>

(Chapter XXIII Code of Criminal Procedure)

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, No.I, UDUMALPET**

| | | |
|---|---|---|
| Calender | : | CC No. 187/2017 |
| Miscellaneous | : | |
| Preliminary Register | : | |
| Sessions | : | |
| Deposition of Witness for | : | Prosecution P.W.2 |

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : மகேஷ் | தொழில் | : |
| தகப்பனார் பெயர் / கணவர் பெயர் | : வெங்கடசாமி | ஜாதி | : |
| கிராமம் | : | இனம் | : |
| தாலூக்கா | : | வயது | : |
| Mail ID | : | Mobile No. | : |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969, (Central Act 44 of 1969) on 12.06.2023.

**<u>எதிரி தரப்பில் குவிமுச பிரிவு 311 ன் படி மனு தாக்கல் செய்து அனுமதிக்கப்பட்டு சாட்சி மீண்டும் வரவழைக்கப்பட்டு குறுக்கு விசாரணை</u>**

1. நான் பிளாஸ்டிக் Business செய்து வருகிறேன். எனது கம்பெனி தீ விபத்தால் மூடிவிட்டதாக குறிப்பிட்டிருந்தேன் என்றால் எனது கம்பெனியை மூடிவிட்டேன் ஆனால் பிளாஸ்டிக்கை ரகம் பிரித்து விற்பனை செய்து வருகிறேன். நான் வேண்டும் என்றே வாங்கிய கடனில் இருந்து தப்பிப்பதற்காக தீ விபத்து ஏற்பட்டதாக கூறி நிறுவனத்தை மூடிவிட்டேன் என்றால் சரியல்ல. திருப்பூர் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அலுவலகத்தில் கொடுத்த புகாரை நான் தான் எழுதினேன் என்றால் ஞாபகம் இல்லை ஆனால் நானும் என் மனைவியும் சென்று புகார் கொடுத்தோம். மின் இணைப்பு பெயர் மாற்றம் செய்யப்பட்டது எப்போது எனக்கு தெரிய வந்தது என்றால் எதிரியே 2011–2012 ம் ஆண்டு எங்களிடம் கூறினார். SC 245 மின் இணைப்பு உள்ள இடத்தின் உரிமையாளர் நான் இல்லை என்று சென்னால் என் மனைவி தான் உரிமையாளர். மேற்படி இடத்தின் முழு உரிமை பொறுப்பு என் மனைவியை சேர்ந்தது என்றால் சரிதான். மின் இணைப்பு பெயர் மாற்ற விண்ணபத்தில் எதிரி கையெழுத்து செய்தது எனக்கு நேரடியாக தெரியாது என்றால் மேற்படி எதிரி கூறியதன் பேரில் மின்சார

அலுவலகத்தில் சென்று விசாரித்தபோது பெயர் மாற்ற விண்ணப்பத்தில் நாங்கள் கையெழுத்து போடவில்லை ஆனால் மேசடியாக எங்கள் கையெழுத்து போடப்பட்டிருந்தது தெரியவந்தது அது எதிரியா என எனக்கு நேரடியாக தெரியாது என்றால் தெரியாது ஆனால் நாங்கள் கையெழுத்து போடவில்லை.

2. நான் சீட்டு போட்டு அந்த பணத்தை கடன் கட்டாததால் அதற்கு ஆதரவாக அந்த சொத்தை கொடுத்தேன் என்றால் இல்லை அடமானத்திற்காக ஒப்பந்தம்போட்டு பொது அதிகார பத்திரம் கொடுத்திருந்தேன் அதை என் அனுமதி இல்லாமல் அவர் விற்பனை செய்துவிட்டார். அசல் ஆவணங்கள் அனைத்தும் கிரையம் கொடுத்த நபரிடம் கொடுத்துவிட்டோம் என்றால் இல்லை வங்கியில் ரூ.4,90,000/– கடன் வாங்கியதற்கு நான் ரூ.3,00,000/– கட்டி இருந்தேன். மீதி ரூ.1,90,000/– அர்ஜுன் அமராவதி கம்பெனி மேலாளர் கட்டினார் மேலாளர் ஆவணத்தை வாங்கி வைத்திருக்கிறேன் என்று சொன்னார் நிர்வாக மேலாளருக்கு காட்டிவிட்டு தருவதாக சொன்னார் தரவில்லை. எந்த தேதியில் மின் இணைப்பு பெயர் மாற்றம் சம்பந்தமாக SP Office ல் புகார் கொடுத்தோம் என்றால் தேதி ஞாபகம் இல்லை 20–– நான் கோமங்கலம் காவல் நிலையத்திலும் புகார் கொடுத்து அந்த புகார் மேல் விசாரணை முடிக்கப்பட்டது என்றால் சரிதான். ஆனால் அது நில அபகரிப்பு சம்பந்தப்பட்ட வழக்கு ஆகும்.

3. மேற்படி நிலமும் மின் இணைபப்பும் ஒரே இடத்தில் ஒரே ஆவணத்தில் உள்ளது என்றால் சரிதான். ஆனால் மின் இணைப்பு எல்லை உடுமலை பகுதிக்குட்பட்டது என்பதால் திருப்பூர் காவல் கண்காணிப்பாளிடம் புகார் கொடுத்தோம். நானும் எனது மனைவியும் எதிரியிடம் இந்து பணம் பறிக்க வேண்டும் என்ற கெட்ட எண்ணத்தில் புகார் கொடுத்தோம் என்றால் சரியல்ல. எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் சம்பந்தமில்லை என்றால் சரியல்ல.

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியால் படித்து பார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கையெழுத்து செய்தும் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது.

Sd/-Vijayakumar,
நீதித்துறை நடுவர் எண்.1
உடுமலைப்பேட்டை.